19th September 1961]

(இ) The Government have asked the Collector of **North Arcot** to take necessary action in the matter.

1620 *Q.*—Sri M. SELVARAJ : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் எப்போது துவக்கப்பட்டது ?

(இ) இதுவரையில் எவ்வளவு ரூபாய் செலவாகியிருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) The Vriddhachalam Water-Supply Scheme was taken up for execution in February 1959. All the works connected with the scheme, except the R.C.C. Reservoir and the gallery have been completed.

(இ) The total expenditure incurred up to May 1961 is nearly Rs. 3·82 lakhs.

The Pilot scheme is expected to be brought to beneficial use in the current month.

Sri M. SELVARAJ : இந்த ரிசர்வாயர் எப்போது கட்டி முடிக்கப்படும் ? குறிப்பாக அந்த இலாகாவில் மேலதிகாரியாக இருக்கும் அதிகாரிக்கும் கீழே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் தகராறுகள் இருந்துகொண்டிருப்பதன் காரணமாகத்தான் வேலை தாமதப்படுகிறது என்று பேசப்படுகிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விசாரிப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இவ்விதமான தகராறு இருப்பதாக என் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. தகராறு இருப்பதாக தெரிவித்தால் அதை தீர்த்துவைக்க முயற்சி எடுக்கலாம்.

Yoga-cum-*Ayurveda Centre*

* 1621 *Q.*—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to start Yoga-*cum*-Ayurveda Centre for treatment of tuberculosis in the State?

The Hon. Sri M. A. MANICKAVELU : No, Sir.

Sri T. T. DANIEL : Is the Hon. Minister aware that some yogic exercises coupled with the administration of some Ayurvedic medicines form a good treatment for tuberculosis? If so, will the Government consider the desirability of starting a Yoga-*cum*-Ayurveda centre in our State?

The Hon. Sri M. A. MANICKAVELU : I think in the first instance, this venture should be undertaken by some private agency. Unless something more tangible is known, the Government cannot venture on this business.

Sri T. T. DANIEL : Is it not a fact that the Kerala Government have already decided to start such a centre by investing a sum of Rs. 20 to 30 lakhs?

The Hon. Sri M. A. MANICKAVELU : Not all that the Kerala Government are doing, we do; nor all that we do, they do. In all such matters, we have to wait and watch the results of the venture.

[19th September 1961

SRI S. NAGARAJA MONIGAR : Is it not a fact that physical exercises improve health and yogic exercise is a means of improving health and removing many diseases? If so, will the Government pay adequate attention to encourage Yoga?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is a very elementary principle and I am glad the hon. Member knows it so well.

Claims Tribunal—Road Accidents

* 1622 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the action taken by the Government to appoint a Claims Tribunal for adjudicating the claims of compensations in road accidents involving motor vehicles?

THE HON. SRI V. RAMAIAH : The Government have appointed a single member Claims Tribunal in each Sessions District in this State for the purpose of adjudicating upon claims for compensation in respect of accidents involving the death of or bodily injury to persons arising out of the use of motor vehicles. The District and Sessions Judge is the Claims Tribunal in each Sessions district while the Principal Judge, City Civil Court is the Claims Tribunal in Madras City. Rules for the working of and the procedures to be followed by these Claims Tribunals have also been issued.

SRI M. KALYANASUNDARAM : இந்த நீதிமன்றங்கள் எந்த தேதியிலிருந்து இயங்க ஆரம்பித்திருக்கின்றன? கடந்த மூன்று வருட காலத்தில் நேர்ந்துள்ள விபத்துகளுக்கு நஷ்டஈடு கோருவதற்கு இந்த கோர்ட்டுக்கு சர்க்கார் அனுமதி கொடுப்பார்களா?

THE HON. SRI V. RAMAIAH : எந்த தேதியிலிருந்து இயங்க ஆரம்பித்திருக்கிறது என்ற விவரம் இப்போது என்னிடமில்லை. மற்ற விவரங்களுக்கு தனியாக கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know from the Hon Minister the procedure that is to be adopted in such cases—whether the parties who were affected or their relations should apply for this claim or whether the Police themselves will apply to the Tribunal?

THE HON. SRI V. RAMAIAH : I want notice of a separate question, Sir.

SRI M. KALYANASUNDARAM : ஸார், ஜில்லாவில் இருக்கக்கூடிய மோட்டார் அதிகாரிகள் அதாவது ஆர்.டி.ஒ.-க்களுக்கு, இம்மாதிரி விபத்துக்கள் எற்படும்போது அதற்கு உதவி செய்வதற்கு ஆலோசனை கூறப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது இருக்கக்கூடிய முறைப்படியே போதுமான உதவி கொடுக்கவேண்டும் என்பதுதான். இப்போது இருக்கக்கூடியதே தொடர்ந்து இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.